[1992 மார்ச் 26

மையப் பகுதியாகிய காவல் நிலையத்திற்குப் பக்கத்தில் தனியாருக்குச்சொந்தமான காலியிடத்தைக்கையகப்படுத்தி, அங்கே பேருந்து நிலையம் அமைக்க எதையும் திறம்பட முடிக்கும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அது பற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 369. திரு. இரா. நடேசன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

369—

கூட்டுறவுச் சங்க நியமன உறுப்பினர்களின் நியமனம் ரத்து

* 452—திரு. இரா. நடேசன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் முறைகேடாக நியமிக்கப்பட்ட நியமன உறுப்பினர்களின் நியமனங்களை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). தொடக்கநிலை கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் 28–7–1991 அன்று தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1991-ன் மூலம் ஏற்கெனவே கலைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 370—டாக்டர் ஜி. ஆர். மாலா. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.